முற்பகல் 10–15

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராஜபாளையம் நகராட்சியில் உள்ள பெண்கள் சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை 666. மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 12207. குழுக்களின் மொத்த சேமிப்புத் தொகை ரூ.187.76 இலட்சம். கடன் வசதி பெறத் தயார் நிலையில் உள்ள மகளிர் குழுக்களின் எண்ணிக்கை 508. வங்கிக் கடன் பெற்ற குழுக்களின் எண்ணிக்கை 171. வழங்கப்பட்ட கடன் தொகை ரூ.204.58 இலட்சம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மா. இராஜசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்தில் எத்தனை மகளிர் சுய உதவி குழுக்கள் இயங்குகின்றன என்பதனைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நமது அமைச்சருக்கு பரீட்சை வைக்கின்ற மாதிரி தெரிகிறது. (சிரிப்பு)

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்தில் செயல்படும் மொத்த சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை 1,927; மொத்த மகளிர் எண்ணிக்கை 87,845; குழுக்கள் சேமித்துள்ள தொகை ரூபாய் 13,95,71,000; கடன் வழங்கப்பட்ட தொகை ரூபாய் 19,59,57,000 என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பரீட்சையில் பாசாகிவிட்டீர்கள். வினா எண் 29, திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

29—

கொத்தடிமைத் தொழிலாளர்

***7931—திரு. வெ. ஏழுமலை:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கொத்தடிமைத் தொழிலாளர் முறை முற்றிலும் ஒழிக்கப்பட்டு விட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

2004 ஜூலை 27]

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் கொத்தடிமைத் தொழிலாளர் முறை முற்றிலுமாக ஒழிக்கப்படத் தேவையான நடவடிக்கைகள் முனைப்புடன் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. வெ. ஏழுமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கொத்தடிமைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்கு அரசு கடுமையான நடவடிக்கை எடுத்து வந்தாலும்கூடப் பல இடங்களில் கொத்தடிமைகளை மீட்கப்படுவதாகச் செய்தித்தாள்களின் மூலம் அறியப்படுகிறது. எந்தப் பகுதியில் அந்தக் கொத்தடிமைகள் மீட்கப்படுகின்றார்களோ அந்தப் பகுதியில் இருக்கின்ற அரசு அலுவலர்களுக்கு அரசு பொறுப்பை வழங்கி இதுபோன்ற கொத்தடிமைத் தொழிலாளர் முறை இல்லாமல் இருக்க நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய அளவில் கொத்தடிமை முறையை நீக்குவதற்காகக் கொத்தடிமை ஒழிப்புச் சட்டம் 1976—ல் இயற்றப்பட்டு அவ்வாண்டு முதல் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. உச்ச நீதிமன்ற ஆணையின்படி 1996—97—ல் கொத்தடிமைத் தொழிலாளர் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன்படி அவ்வாண்டுகளில் கொத்தடிமைத் தொழிலாளர்களாகத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் கண்டறியப்பட்டவர்கள் 25,005 பேர். துறை வழியான ஆய்வு மூலம் கண்டறியப்பட்டவர்கள் 12,857 பேர். ஆகமொத்தம் 37,862 பேர் கொத்தடிமைகளாகக் கண்டறியப்பட்டுள்ளனர். இவர்களில் வருவாய் கோட்டாட்சியர்கள் மேற்கொண்ட ஆய்வின்படி 21,356 பேர் கொத்தடிமைகள் அல்ல என முடிவு செய்யப்பட்டு நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளது. 12,931 நபர்கள் கொத்தடிமையிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர். மீதமுள்ள 3,575 பேர் பற்றிய விசாரணை நடைபெற்று வருகிறது. கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களின் மறுவாழ்வுக்கு உடனடி நிவாரணமாக ரூபாய் 1000 வழங்கப்படுகிறது. அதன்பின் அவர்களின் மறுவாழ்வுக்காக ரூபாய் 19,000 அளவிற்கு முழு நிவாரணமாக வழங்கப்பட்டு வருகிறது. கொத்தடிமையிலிருந்து மீட்கப்பட்டவர்களின் மறுவாழ்வுக்கு இதுவரை மொத்தம் ரூபாய் 1301.41 இலட்சம் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. கொத்தடிமையிலிருந்து விடுவிக்கவும் கொத்தடிமைத்தனத்திலேயே சிக்காமல் இருப்பதற்கும்

தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வெ. ஏழுமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கொத்தடிமைத் தொழிலாளர்கள் பெரும்பாலும் கல் குவாரிகளில் அதிகமாகக் காணப்படுவதாக அறிகிறோம். அவ்வாறு கல் குவாரிகளை ஆய்வு செய்கின்ற அதிகாரிகள் இரகசிய முறையில் ஆய்வு செய்து அந்தக் கல் குவாரிகளிலே கொத்தடிமைத் தொழிலாளர்கள் இருக்கின்றார்களா என்பதை அறிய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல கல் உடைக்கும் தொழிலாளர்களோ அல்லது செங்கல் சூளையில் வேலை பார்ப்பவர்களோ அல்லது அரிசி ஆலையில் பணி செய்பவர்களோ ஏதாவது நிறுவனங்களிலோ அல்லது தொழில் செய்கின்ற அந்தத் தொழில் செய்வோர்கள் மத்தியிலோ கொத்தடிமைகள் என்று தெரியவருமானால் R.D.O. தலைமையில் வட்டாட்சியர், தொழிலாளர் நல ஆய்வாளர், வட்டத் தொழிலாளர் நல ஆய்வாளர் ஆகியோர் மூலமாகக் கண்டறியப்பட்டு அவர்கள் மூலமாக நேரடி விசாரணை செய்யப்பட்டு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 30, திரு. ஜெக. வீரபாண்டியன் மற்றும் திரு. ராதாரவி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

30—

நரிக்குறவர்கள் நலன்

***24439—திரு. ஜெக. வீரபாண்டியன்:**
திரு ராதாரவி:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாடோடிகளாக வாழும் நரிக்குறவர்களைத் தாழ்த்தப்பட்ட மலைவாழ் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS